FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364178

1. District : TRICHY மாவட்டம் — காவல்நிலையம்: Vigilance and Anti Corruption Trichy — Year: 2026 ஆண்டு — FIR No.: 11 முத.அ. எண் — Date: 19.06.2026 நாள்

2. (i) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்: 7, 7A
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல்: 18.6.2026 — Date to நாள் வரை:
Time Period : நேர அளவு — Time from நேரம் முதல்: 1200 hrs. — Time to நேரம் வரை: 1730 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 19.6.2026 — Time நேரம்: 1400 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 18.6.2026 — Time நேரம்:

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்: Typed in computer

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Motor Vehicle Inspector office o/o the RTO Trichy West Registered. Trichy Approximately 5KM west
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்: —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: T. SURESH — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: THANGAVELU
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 20.7.74 — (d) Nationality : நாட்டினம்: INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
Date of Issue : வழங்கப்பட்ட நாள்: — Place of Issue : வழங்கப்பட்ட இடம்:
(f) Occupation : தொழில்: Revenue Inspector District Inspection Cell, — (g) Address : முகவரி: Trichy

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Separate Sheet enclosed

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்: No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி. அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.6.2026

19.6.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19.6.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 15.30 hrs.

G. SAKTHIVEL
Name: பெயர் Inspector of Police
Rank: நிலை ..... No. எண் .....

மாண்புமிகு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2026 இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 7ன் தொடர்ச்சி.....

1. திரு.M.D.அமர்நாத், வயது 56/2026,
த/பெ மோகன்தாஸ்,
மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1,
திருச்சி மேற்கு, திருச்சி.

2. திரு.சுரேந்திரநாத், வயது 48/2026,
த/பெநடராஜன், 58,
குறிஞ்சித்தெரு,
அசோக்நகர் மேற்குவிஸ்தரிப்பு,
கருமண்டபம், திருச்சி.

3. திரு.சதீஷ்குமார், வயது 48/2026,
த/பெசந்திரன்,
நெ.36, தென்றல்நகர்,
போதாவூர், திருச்சி.

4. திரு.கதிர்வேல், வயது 64/2026,
த/பெகாளியப்பன்,
234ஏ, ரிவேராநகர்,
கே.கே.நகர், திருச்சி.

5. திரு.பரமசிவம், வயது 58/2026,
த/பெநாராயணன்,
நெ.11, புதுத்தெரு,
கிராப்பட்டி, திருச்சி.

6. திரு.K.R.சலீம்பாட்சா, வயது 63/2026,
த/பெஅப்துல்ரசீத்,
நெ.2/61, முஸ்லீம்தெரு,
கம்பரசம்பேட்டை, திருச்சி,

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2026–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 19.06.2026 பணியில் இருந்த போது, பிற்பகல் 14.00 மணியளவில் திரு.த.சுரேஷ், 51/2026, த/பெதங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி என்பவர் ஆஜராகி 18.06.2026ஆம் தேதி திருச்சி – திண்டுக்கல் சாலையில் பிராட்டியூரில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அமைந்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு: அனுப்புநர் த.சுரேஷ், வயது 51/2026, த/பெதங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. ஐயா, திருச்சி மாநகரம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணிகளை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொதுமக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொதுபணியாளர்களுக்காக, பொதுமக்களிடமிருந்தும் வாகன உரிமையாளர்களிடமிருந்தும், அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று பொதுபணியாளர்களுக்கு வேலைகளை செய்து கொடுப்பதாகவும், அதில் அரசு அலுவலர்களும், இடைத்தரகர்களும் பயன்பெறுவதாகவும், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி இரகசிய தகவலின்பேரில் 18.06.2026ந்தேதி முற்பகல் சுமார் 11.45 மணிக்கு திருச்சி மாவட்ட ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து, திருச்சி ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ஞசா.சக்திவேல் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு திருச்சி மேற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை முற்பகல் 12.00 மணிமுதல் மாலை 17.30 மணிவரை திடீர்சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர்சோதனையின்போது மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.D.அமர்நாத்

அவர்களின் அலுவலக அறையை சோதனை செய்ய அவரது இருக்கைக்கு இடதுபுறம் இருந்த கம்ப்யூட்டர் டேபிளில் இருந்த பிளாஸ்டிக் டிரேயில் ரூ.50,000/– இருந்தது, மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்படி பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தாலும், மேற்படி அறையானது மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உரிய அறையாகும். எனவே அங்கிருந்த பணத்திற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.அமர்நாத் எவ்வித விளக்கமும் கணக்கும் கூறாமல் தனக்கு தெரியாது என்று மட்டுமே கூறியதால், அப்பணம் பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடம் இருந்து கையூட்டாக கேட்டு பெற்றுவைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வெளியே சந்தேகப்படும்படி நின்றிருந்த சாந்தி டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திரு.சுரேந்திரநாத், த/பெநடராஜன், 58, குறிஞ்சித்தெரு, அசோக்நகர் மேற்குவிஸ்தரிப்பு, கருமண்டபம், திருச்சி என்பவரிடமிருந்து ரூ.6,150/– இருந்தது தொடர்பாக பணத்திற்கும் வந்ததன் நோக்கத்திற்கும் காரணம் சரிவர தெரிவிக்காமல் இருந்தததால் சந்தேகப்பட்டு மேற்படி ரூ.6,150/– கைப்பற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அவர் தெரிவித்த தகவலின் பேரில் RTO office-ற்கு எதிர்புறம் பிராட்டியூர் கீழத்தெரு என்ற முகவரியில் இருந்த சாந்தி டிரைவி ங்ஸ்கூல் என்ற பெயரில் வைத்திருந்த ஒரு அறையிலிருந்து திரு.சுரேந்திரநாத் எடுத்து ஆஜர் செய்த ரூ.50,000/–ரொக்கத்தையும், 16 துண்டு சீட்டுகளையும், சாந்திடி ரைவிங் ஸ்கூல் அடுத்தாற்போல் பாண்டியன் டிரைவிங்ஸ்கூல் வாசலில் சந்தேகப்படும்படியாக நின்றிருந்த திரு.சதீஷ்குமார், த/பெசந்திரன், நெ.36, தென்றல்நகர், போதாவூர், திருச்சி என்பவரை விசாரிக்க அவர் வைத்திருந்த ரூ.2,550/–ற்கும் உரியகணக்கு காட்டாததால் கைப்பற்றப்பட்டது. மேலும், சாந்தி டிரைவிங் ஸ்கூல் அடுத்தாற்போல் ரெயின்போ போட்டோ ஸ்டுடியோ வாசல் அருகே சந்தேகப்படும்படியாக நின்றிருந்த திரு.கதிர்வேல், த/பெகாளியப்பன், 234ஏ, ரிவேராநகர், கே.கே.நகர், திருச்சி என்பவர் அவர் வைத்திருந்த ரூ.20,000/–ற்கும் உரிய கணக்கு காட்டாததால் கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.கதிர்வேல் அருகே சந்தேகப்படும்படியாக நின்றிருந்த திரு.பரமசிவம், த/பெநாராயணன், நெ.11, புதுத்தெரு, கிராப்பட்டி,

திருச்சி என்பவர் அவர் வைத்திருந்த ரூ.13,750/-ற்கு உரியகணக்கு காட்டாததால் கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக வாசல் பகுதியிலிருந்த பொதுமக்கள் அமரும்பகுதிக்கு அடுத்து இருந்த காலிப்பகுதியில் கேட்பாரற்று கிடந்த ரூ.3,160/- பணம் குறித்து அங்கிருந்த நபர்களிடம் நான் கேட்க, அப்பணத்திற்கு யாரும் உரிமை கோராததால், அப்பணம் அலுவலர்களுக்கு கொடுக்க வைத்திருந்து, யாரோ வீசி சென்ற கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் வெளியே இருந்த ஷெட் அருகே சந்தேகம்படும்படி கையில் பேப்பர்களுடன் நின்றிருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் K.R.சலீம்பாட்சா, த/பெஅப்துல்ரசீத், நெ.2/61, முஸ்லீம்தெரு, கம்பரசம்பேட்டை, திருச்சி என்று தெரிவித்தார். அவர் கையில் போக்குவரத்து துறை தொடர்பான 6 விண்ணப்பங்கள் வைத்திருந்தார். மேற்படி ஆவணங்களுக்குரிய நபர்கள் குறித்து நான் அங்கிருந்தவர்களிடம் வினவ, அந்த விண்ணப்பதாரர்கள் யாரும் அதுகுறித்து கேட்க முன்வராததால் சந்தேகமுற்று, அவ்விண்ணப்பங்களை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர்சோதனை செயல்முறைகளின்படி சந்தேகத்திற்குமிடமான முறையில் கணக்கில் வராத கையூட்டு பணம் மொத்தம் ரூ.1,45,610/-யும், போக்குவரத்துதுறை தொடர்பான பிறநபர்களது விண்ணப்பங்களையும் வைத்திருந்த மேற்படி நபர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 18.06.2026ந்தேதி தயார் செய்யப்பட்ட திடீர்சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (த.சுரேஷ்) 19.6.2026. திடீர் சோதனை செயல்முறை இன்று 18.06.2026ந்தேதி பிற்பகல் சுமார் 12.00 மணிக்கு திருச்சி - திண்டுக்கல் சாலையில் பிராட்டியூரில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அமைந்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக ஆய்வாளர் திரு.சுரேஷ், த/பெ தங்கவேலு, முதுநிலை வருவாய் ஆய்வர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலம், திருச்சிராப்பள்ளி அவர்கள் தலைமையில்

திரு.ஞா.சக்திவேல், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருச்சி மற்றும் குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள். திருச்சி மாநகரம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொதுமக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொதுமக்களிடமிருந்தும் வாகன உரிமையாளர்களிடமிருந்தும், அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், மேலும் திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் பணியாளர்கள் ரஹீம், பாப்புலர் Ex.Army என்ற டிரைவிங் ஸ்கூல் வழியாக இடைத்தரகர்கள் மூலம் வசூல் செய்வதாகவும், அதில் தாங்களும், இடைத்தரகர்களும் பயன் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், தகவல் தெரிவித்து வரப்பெற்ற மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.சுரேஷ் மற்றும் விஜிலென்ஸ் ஆய்வாளர் திரு.ஞா.சக்திவேல் மற்றும் விஜிலென்ஸ் போலீசார் சகிதம் இன்று 18.06.2026 முற்பகல் சுமார் 11.45 மணிக்கு திருச்சி மாவட்ட ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு திருச்சி மேற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வந்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அங்குள்ள RTO அலுவலகம் மூன்று தளங்கள் கொண்ட கட்டிடமாகும். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் இடதுபுறத்தில் அமைந்துள்ளது, மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அருகே தகுதி சான்று புதுப்பித்தலுக்காக வாகனங்கள் இருந்தன. வளாகத்தின் வெளியேயும், அலுவலகத்தின் உள்ளே அனைத்து பகுதிகளிலும் ஆங்காங்கே காவலர்களை நிறுத்தி, அங்கிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை ஆய்வுகுழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தனர். வளாகத்தின் உள்ளே ஆங்காங்கே நின்று கொண்டிருந்தவர்கள் லஞ்ச ஒழிப்பு காவலர்களை பார்த்ததும் ஒரு சிலர் அந்த இடத்தை விட்டு வேகமாக செல்ல முயற்சித்தவர்களை காவலர்கள் உதவியுடன் நிறுத்தி அலுவலகத்திற்குள்ளே அழைத்து வந்து அமரவைக்கப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில்

மோட்டார் வாகன ஆய்வாளர் அறை கிழக்கு பார்த்த வாசலுடன், கண்ணாடியால் தடுக்கப்பட்ட தனி அறையாக அமைந்துள்ளது, அதனையடுத்து, பொதுமக்கள் புகைப்படம் எடுக்கும் அறையும் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் வெளியே பொதுமக்கள் அமரும் இடம் ஆஸ்பெட்டாஸ் சீட் போடப்பட்டு இருக்கைகளுடன் உள்ளது. மேற்படி பொதுமக்கள் அமரும் இடத்தில் இருந்த நபர்களை ஒவ்வொருவராக ஆய்வுக்குழு ஆய்வாளர் விசாரிக்க அவர்களில்

வ.எ	பெயர்	அலுவலகம் வந்த காரணம்	கையிருப்பு பணம் ரூ.
1)	திரு.ராஜா, வயது 32/26, த/பெ சுப்ரமணி, 0/21, ஜீவா நகர், மதுரைரோடு, திருச்சி-8 9943095402	RC renewal க்காக	ரூ.400/-
2)	திரு.வெங்கடபிரசாத், 45/26, த/பெ கருப்பையா, நெ.88, கரிக்கான்குளம்தெரு, கோவில்பட்டிரோடு, மணப்பாறை, திருச்சி. 9842583115	ஓட்டுநர் உரிமம் தொடர்பான சந்தேக கேட்க வந்ததாக	ரூ.370/-
3)	திரு.மோகன், வயது 46/26, த/பெ நாகராஜன், 4/97, மேலத்தெரு, கூகூர், லால்குடி, திருச்சி. 9843874744	ஓட்டுநர் உரிமம் தொடர்பான சந்தேக கேட்க வந்ததாக	ரூ.200/-
4)	திரு.கணேசன், வயது 43/26, த/பெ திருஞானம், 18, கீழ கொசத்தெரு, பீமநகர், திருச்சி. 99763677465.	Vehicle RC தொடர்பான சந்தேக கேட்க வந்ததாக	ரூ.470/-
5)	திரு.அக்பர் அலி, வயது 53/26, த/பெ முகமது அலி, 36, நீயூ ராஜாகாலணி, பீமநகர், திருச்சி, 9514610269	Vehicle FC தொடர்பான சந்தேக கேட்க வந்ததாக	ரூ.2,500/-

மேற்கண்ட நபர்களிடம் இருந்த பணம் பற்றி ஆய்வுக்குழு ஆய்வாளர் கேட்க அப்பணம் குறித்து மேற்கண்ட நபர்கள் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் மேற்படி பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.M.D.அமர்நாத் அவர்களின் அலுவலக

அறையை சோதனை செய்ய அவரது இருக்கைக்கு இடதுபுறம் இருந்த கம்ப்யூட்டர் டேபிளில் இருந்த பிளாஸ்டிக் டிரேயில் ரஹீம் ரூ.25,000/-, பாப்புலர் ரூ.15,000/- மற்றும் EX-Army ரூ.10,000/- என ஒரு பேப்பரில் எழுதப்பட்ட, பேப்பருடன் 500 ரூபாய் நோட்டுகளாக இருந்த கட்டுடன் சுற்றப்பட்ட நிலையில் இருந்தது. ஆய்வு குழு ஆய்வாளர் மூலம் எண்ணிப்பார்க்க ரூ.50,000/- இருந்தது. அது பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்க அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். அப்பணம் பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடம் இருந்து கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ரூ.50,000/- கைப்பற்றப்பட்டது. மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் வெளியே சந்தேகப்படும்படி நின்றிருந்த சாந்தி டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் திரு.சுரேந்திரநாத், வயது 48/2026, த/பெ நடராஜன், 58, குறிஞ்சித்தெரு, அசோக்நகர் மேற்கு விஸ்தரிப்பு, கருமண்டபம், திருச்சி என்பவரிடம் ஆய்வுக்குழு ஆய்வாளர் விசாரிக்க அவர் தன்னிடம் ரூ.6,150/- உள்ளது எனக்கூறி ஆஜர்படுத்தினார். அப்பணம் குறித்து கேட்க அப்பணம் தான் பொதுமக்களிடமிருந்து ஓட்டுநர் உரிமம் பெற, வாகன பதிவு புதுப்பித்தல் முதலான பணிகளுக்காக செய்து கொடுத்த கட்டணத்தை விட கூடுதலாக வசூலித்து வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் கூடுதலாக வசூலித்த தொகை யார் யாருக்கு கொடுக்க வைத்திருக்கிற விபரம் எதுவும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தார். மேலும், வேறு ஏதேனும் தொகை தங்கள் வசம் உள்ளதா என விசாரிக்க நான் RTO Office-க்கு எதிர்புறம் நெ.29/2, பிராட்டியூர் கீழத்தெரு என்ற முகவரியில் சாந்தி டிரைவிங் ஸ்கூல் என்ற பெயரில் அலுவலக அறை வைத்துள்ளதாகவும், அதில் ரூ.50,000/- உள்ளதாகவும் அங்கு சென்றால் அப்பணத்தை எடுத்து ஆஜர் செய்வதாக தெரிவித்தார், அதன் பேரில் ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் மேற்படி சாந்தி டிரைவிங் ஸ்கூல் அலுவலக அறைக்கு சென்று அப்பணம் குறித்து சுரேந்திரநாத்திடம் கேட்க அவர் அலுவலக மேஜை டிராயரிலிருந்து ரூ.50,000/- பணத்தையும், அத்துடன் பேனாவால் எழுதப்பட்ட 16 துண்டு சீட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் மற்றும் துண்டு சீட்டுகள் பற்றி கேட்க, அப்பணம் குறித்து கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்து, அப்பணத்திற்கு எவ்வித

கணக்கும் காட்டாமல் இருந்தார், அப்பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலுள்ள பணியாளர்களுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என சந்தேகப்பட்டு கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி 16 துண்டு சீட்டுகளில் உள்ள குறிப்புகள் குறித்து விசாரிப்பதற்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், மேற்படி சாந்தி டிரைவிங் ஸ்கூலுக்கு அருகே பாண்டியன் டிரைவிங் ஸ்கூல் என்ற பெயரில் ஒரு சிறிய அலுவலகம் இருந்தது, அந்த அலுவலகத்தின் வாசல் பகுதியில் திரு.சதீஷ்குமார், த/பெ சந்திரன், நெ.36, தென்றல்நகர், போதாவூர் திருச்சி என்பவர் சந்தேகப்படும்படியாக நின்றிருந்தார். அவரை சந்தேகப்பட்டு ஆய்வுக்குழு ஆய்வாளர் விசாரிக்க அவர் தான் எப்போதாவது மோட்டார் வாகன துறை அலுவலகத்திற்கு சென்று, பொதுமக்களுக்கு லைசென்ஸ் பெற்றுக்கொடுப்பதற்காக சென்று வருவதாகவும், பொதுமக்களிடம் கூடுதலாக பெறும் தொகையை தனது செலவுக்கு பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள ரொக்கம் குறித்து கேட்க அவர் ரூ.2,550/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்து, அப்பணத்திற்கு எவ்வித கணக்கும் காட்டாமல் இருந்தார், அப்பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலுள்ள பணியாளர்களுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என சந்தேகப்பட்டு கைப்பற்றப்பட்டது. பின்னர், RTO அலுவலகம் எதிரே இருந்த சாந்தி டிரைவிங் ஸ்கூல் அலுவலகத்திற்கு அடுத்தாற்போல் சுமார் 50 மீட்டர் தொலைவில் ரெயின்போ போட்டோ ஸ்டுடியோ என்ற பெயரில் ஒரு போட்டோ ஸ்டுடியோ இருந்தது, அந்த ஸ்டுடியோ வாசலில் இரண்டு நபர்கள் நின்றிருந்தனர் அதில் திரு.கதிர்வேல், த/பெ காளியப்பன், நெ.234ஏ, ரிவேரா நகர், கே.கே.நகர், திருச்சி என்ற நபரை சந்தேகப்பட்டு ஆய்வுக்குழு ஆய்வாளர் விசாரிக்க அவர் தான் எப்போதாவது மோட்டார் வாகன துறை அலுவலகத்திற்கு பொதுமக்களுக்கு லைசென்ஸ் பெற்றுக்கொடுப்பதற்காக சென்று வருவதாகவும், பொதுமக்களிடம் பெறும் கூடுதல் கட்டணத்தொகையை தனது செலவுக்கு பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள ரொக்கம் குறித்து கேட்க அவர் ரூ.20,000/-த்தை 500 மற்றும் 100 ரூபாய் நோட்டுகளாக கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்க எவ்வித

விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்து, அப்பணத்திற்கு எவ்வித கணக்கும் காட்டாமல் இருந்தார், அப்பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலுள்ள பணியாளர்களுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என சந்தேகப்பட்டு கைப்பற்றப்பட்டது. மேலும், திரு.கதிர்வேல் அருகே நின்றிருந்த திரு.பரமசிவம், வயது 58/2026, த/பெ நாராயணன், நெ.11, புதுத்தெரு, கிராப்பட்டி, திருச்சி என்ற நபரை சந்தேகப்பட்டு ஆய்வுக்குழு ஆய்வாளர் விசாரிக்க அவர் தான் எப்போதாவது மோட்டார் வாகன துறை அலுவலகத்திற்கு பொதுமக்களுக்கு லைசென்ஸ் பெற்றுக்கொடுப்பதற்காக சென்று வருவதாகவும், பொதுமக்களிடம் கட்டணத்தைவிட கூடுதலாக பெறும் தொகையை தனது செலவுக்கு பயன்படுத்துவதாகவும் 'தெரிவித்தார். அவரிடம் உள்ள ரொக்கம் குறித்து கேட்க அவர் ரூ.13,750/-ஐ 200, 100, 50 ரூபாய் நோட்டுகளாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் குறித்து கேட்க எவ்வித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்து, அப்பணத்திற்கு எவ்வித கணக்கும் காட்டாமல் இருந்தார், அப்பணம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திலுள்ள பணியாளர்களுக்கு கொடுக்க வைத்திருந்த கையூட்டு பணமாக இருக்கலாம் என சந்தேகப்பட்டு கைப்பற்றப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறைக்கு அடுத்துள்ள அறையில் இருந்த பணியாளர்களை ஆய்வுக்குழு ஆய்வாளர் விசாரிக்க அவர்களில் (1)செல்வி.மங்கயர்கரசி, வயது 27/2026, த/பெ லெட்சுமணன் என்றும், தான் BONTON LABOUR ஆக பணபுரிவதாகவும், Driving Licence print எடுக்கும் பணி செய்து வருவதாகவும் தெரிவித்தார், அவரிடம் உள்ள பணம் குறித்து ஆய்வுக்குழு ஆய்வாளர் கேட்க, அவர் ரூ.1120/-ஐ எடுத்து ஆஜர். மேற்படி பணம் பற்றி கேட்க, அது தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (2) திரு.S.P.மோகன்பாபு, வயது.30/2026, த/பெ, பிரபாகரன், BONTON LABOUR ஆக பணபுரிவதாகவும், தான் R.C. print எடுக்கும் பணி செய்து வருவதாக தெரிவித்தார், அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.200/- பற்றி கேட்க அவர் அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக வாசல் பகுதியிலிருந்த பொதுமக்கள் அமரும் பகுதியில் இருந்த ஆஸ்பெட்டாஸ்

ஷெட்டை அடுத்து இருந்த காலிப்பகுதியில் கேட்பாரற்று கிடந்த ரூபாய் நோட்டுகளை ஆய்வுக்குழு ஆய்வாளர் எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.3,160/- இருந்தது, அப்பணம் குறித்து அங்கிருந்த நபர்களிடம் கேட்க யாரும் உரிமை கோராததால், அப்பணம் அலுவலர்களுக்கு கொடுக்க வைத்திருந்து, யாரோ வீசி சென்ற கையூட்டு பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. மேலும், ஷெட் அருகே சந்தேகம்படும்படி கையில் பேப்பர்களுடன் நின்றிருந்த நபரை விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் K.R.சலீம் பாட்சா, வயது 63/2026, த/பெ அப்துல் ரசீத், நெ.2/61, முஸ்லீம் தெரு, கம்பரசம்பேட்டை, திருச்சி என்று தெரிவித்தார். அவர் கையில் வைத்திருந்த பேப்பர்கள் குறித்து ஆய்வுக்குழு ஆய்வாளர் கேட்க அது (1) Application for Sanction Order/ Fresh Permit in respect of applicant Moses Sebistiyar Manapparai, Trichy, (2) Application for New Vehicle Permit(Taxi) in respect of Tr.Santhana Kumar, (3) Application for surrender of permit(Goods Carrier) TN45 BF 7628, (4) Application for surrender of permit TN55 Y 8300, (5) Application for Lost of Driving license in respect of Tr.Harikrishnan, Illupur, Pudukkottai, (6) Application for Lost of Driving license in respect of Tr.Rajkamal, Inamthar thoppu, Thennur ஆகிய ஆவணங்கள் பற்றியும், அவர் வைத்திருந்த பணம் ரூ.200/- பற்றி கேட்க அந்த பணம் தனது சொந்த பணம் என தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி விண்ணப்ப ஆவணங்களுக்குரிய நபர்கள் குறித்து வினவ, அந்த விண்ணப்பதாரர்கள் யாரும் அதுகுறித்து கேட்க முன்வராததால் சந்தேகமுற்று, அவ்விண்ணப்பங்களை மேல்நடவடிக்கைக்க கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றுதல் நிகரழ்வுகள் வீடியோ மற்றும் புகைப்படம் மூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறை மாலை 17.30 மணிக்கு முடிக்கப்பட்டது. Submitted to the Court of the Hon'ble Principal District and Sessions Judge, Trichy District.

Received the said computer typed complaint at about 1400 hrs. on 19.6.2026 and registered a case in Trichy V&AC Cr.No.11/2026 u/s 106 BNSS r/w sec. 7, 7(A) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 1500 hrs. on 19.06.2026 (Sd.xxxxx) (G.SAKTHIVEL), 19.6.2026, Inspr. of Police, V&AC, Trichy.